இணைப்பு IV

(140 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 9—பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை

அறிவிப்புகள், 2010—2011

1. புதிய விடுதிகள் திறத்தல்

பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பினருக்கு 2010-2011 ஆம் ஆண்டில் 25 விடுதிகளும், இஸ்லாமிய மாணவியருக்கு ஒரு விடுதியும் ஆக மொத்தம் 26 விடுதிகளைப் புதிதாய்த் திறக்க மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

2. கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளை நிலை உயர்த்துதல்

கள்ளர் சீரமைப்புத் திட்டத்தின்கீழ் செயல்படும் இரு உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

3. பொறியியல் மாணவ, மாணவியர்களுக்கு சிறப்புப் பயிற்சி

பொறியியல் பட்டப்படிப்பு படிக்கும் 1,000 பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையின மாணவர்களுக்கு தகவல் தொழில்நுட்பத் துறையில் வேலைவாய்ப்புப் பெறும் வகையில் கணினி மென்பொருள் மற்றும் ஆங்கிலப் பேச்சுத் திறன் ஆகியவற்றில் பயிற்சி (Finishing School) அளிக்க மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

2010 ஏப்ரல் 27]

4. பட்டயக் கணக்காளர் போன்ற தொழில் படிப்பிற்கான நுழைவுத் தேர்வுப் பயிற்சி

பட்டயப் கணக்காளர் (Chartered Accountant) செலவு மற்றும் தொழில் கணக்கீட்டாளர் (Costs and Works Accountant) மற்றும் நிறுவனச் செயலர் (Company Secretary) ஆகிய தொழில் படிப்பில் சேர்வதற்கான நுழைவுத் தேர்வு எழுத விரும்பும் 100 பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் வகுப்பு மாணவ, மாணவியருக்கு அரசுச் செலவில் நுழைவுத் தேர்வுக்கான பயிற்சி அளிக்க மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

5. கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல்

நிலை உயர்த்தப்பட்ட 2 உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 5 மேல்நிலைப் பள்ளிகள் உள்ளிட்ட ஏழு கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் ரூபாய் 84.50 இலட்சம் செலவில் 18 கூடுதல் வகுப்பறைகள் கட்டுவதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

6. கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் கழிவறைகள் கட்டுதல்

10 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 2010-2011 ஆம் ஆண்டில் ரூபாய் 50 இலட்சம் செலவில் கழிவறைகள் கட்டுவதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

7. பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் விடுதிகளுக்கு கணினிகள் வழங்குதல்

2010-2011 ஆம் ஆண்டில் ரூபாய் 45 இலட்சம் செலவில் 60 பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் விடுதிகளுக்கு தலா இரண்டு கணினிகள் வழங்க மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

8. பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் விடுதிகளுக்குச் சுற்றுச்சுவர் கட்டுதல்

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறையின்கீழ் இயங்கும் விடுதிகளில் 10 விடுதிகளுக்கு ரூபாய் 38 இலட்சம் செலவில் சுற்றுச்சுவர் கட்டுவதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

9. பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்ககங்களை நவீனமயமாக்குதல்

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறை அலுவலகங்களை, ரூபாய 35 இலட்சம் செலவில் மர உட்பிரிவுகள் மற்றும் இருக்கைகளுடன் நவீன மயமாக்க தமிழக முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

10. மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்களுக்கு ஈப்புகள் வழங்குதல்

நீலகிரி, திருவண்ணாமலை, வேலூர், சேலம், இராமநாதபுரம் மற்றும் நாகப்பட்டினம் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்களுக்கு தற்பொழுதுள்ள பழைய ஈப்புகளை மாற்றி ரூபாய் 30 இலட்சம் செலவில் புதிய ஈப்புகள் வழங்க மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

11. மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகங்களுக்கு அறைகலன்கள் வழங்குதல்

அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகங்களுக்கு (சிறுபான்மையினர் நலப் பிரிவு) ரூபாய் 17 இலட்சம் செலவில் நடப்பாண்டில் அறைகலன்கள் வழங்க தமிழக முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

12. பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்ககங்களுக்கு கணினிகள் வழங்குதல்

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிர்மரபினர் நல இயக்ககங்களுக்கு நடப்பாண்டில் ரூபாய் 165.17 இலட்சம் செலவில் கணினிகள் வழங்கப்படும்.

13. மதுரை கள்ளர் சீரமைப்பு மாவட்ட வருவாய் அலுவலர் அலுவலகத்திற்கு உள் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல்

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், மதுரை கள்ளர் சீரமைப்பு மாவட்ட வருவாய் அலுவலரின் அலுவலகத்தில் 2010—2011 ஆம் ஆண்டில் பல்வேறு உள்கட்டமைப்பு வசதிகளை கீழ்க்கண்டவாறு ஏற்படுத்துவதற்கு ஆணையிட்டுள்ளார்கள்.

2010 ஏப்ரல் 27]

(அ) 2010-2011 ஆம் ஆண்டில் கள்ளர் சீரமைப்பு, மதுரை மாவட்ட வருவாய் அலுவலரின் அலுவலகத்திற்கு 6 கணினிகள் மற்றும உபகரணங்கள் ரூபாய் 3 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

(ஆ) ரூபாய் 1.10 இலட்சம் செலவில் நடப்பாண்டில் மாவட்ட வருவாய் அலுவலரின் (கள்ளர் சீரமைப்பு) அலுவலகத்திற்கு ஒரு டிஜிட்டல் பிரிண்டர் மற்றும் ஒளிநகலி வழங்கப்படும்.

(இ) மாவட்ட வருவாய் அலுவலரின் (கள்ளர் சீரமைப்பு) அலுவலகத்திற்கு ரூபாய் 10,000 வீதம் 20 இரும்புஅலமாரிகள் ரூபாய் 2 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

(ஈ) மாவட்ட வருவாய் அலுவலரின் (கள்ளர் சீரமைப்பு) அலுவலகத்திற்கு ரூபாய் 1.10 இலட்சம் செலவில் ஒரு லைன் பிரிண்டர் நடப்பாண்டில் வழங்கப்படும்.

(உ) மாவட்ட வருவாய் அலுவலரின் (கள்ளர் சீரமைப்பு) அலுவலகக் கூட்ட அரங்கில் ரூபாய் 0.50 இலட்சம் செலவில் 2 டன் சீர்வளி சாதனம் அமைக்கப்படும்.

14. பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்ககங்களுக்கு தடையற்ற மின் சக்தி சாதனங்கள் வழங்குதல்

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்ககங்களுக்கு இரண்டு 10 K.V. தடையற்ற மின்சக்தி சாதனங்கள் ரூபாய் 2.50 இலட்சம் செலவில் நடப்பாண்டில் வழங்கப்படும்.

15. சிறுபான்மையினர் நல இயக்ககத்திற்கு கணினிகள் வழங்குதல்

சிறுபான்மையினர் நல இயக்ககத்திற்கு 2010-2011 ஆம் ஆண்டில் ரூபாய் 2.50 இலட்சம் செலவில் 5 கணினிகள் வழங்கப்படும்.

16. பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்ககங்களுக்கு டிஜிட்டல் இண்டர்காம் வசதி செய்தல்

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்ககங்களுக்கு டிஜிட்டல் இண்டர்காம் வசதி (EPBAX) ரூபாய் 1.50 இலட்சம் செலவில் செய்து தரப்படும்.

17. சிறுபான்மையினர் நல இயக்ககத்திற்கு தொலைபேசி இணைப்புகள் வழங்குதல்

சிறுபான்மையினர் நல இயக்ககத்திற்கு நடப்பாண்டில் இரண்டு புதிய தொலைபேசி இணைப்புகள் ரூபாய் 0.14 இலட்சத்தில் வழங்கப்படும்.

18. தமிழ்நாடு வக்ஃபு வாரியத்திற்கு மானியம் வழங்கல்

2010-2011 ஆம் ஆண்டில் தமிழ்நாடு வக்ஃபு வாரியத்திற்குப் பெரும்பழுதுகள் மற்றும் சீரமைப்புப் பணிகளுக்காக ரூபாய் 60 இலட்சம், கணினிகள் வாங்குவதற்கு ரூபாய் 2.50 இலட்சமும், நகல் எடுக்கும் இயந்திரம் வாங்குவதற்காக ரூபாய் 1 இலட்சமும், கூட்ட அரங்கு மற்றும் அலுவலகங்களுக்கு மரச் சாமான்கள் வழங்குவதற்கு ரூபாய் 3 இலட்சமும் ஆக மொத்தம் ரூபாய் 66.50 இலட்சம் மானியமாக வழங்க மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

19. தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவிற்கு அறைகலன்கள் மற்றும் மடிக்கணினி வழங்குதல்

2010-2011 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவிற்கு ரூபாய் 1.20 இலட்சம் செலவில் மடிக்கணினி, லேசர் பிரிண்டர், நிகரியும், ரூபாய் 2 இலட்சம் செலவில் அறைகலன்களும் வழங்கப்படும்.

20. தலைமைச் செயலகத்தில் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அலுவலகத்திற்கு டிஜிட்டல் பிரிண்டர் மற்றும் நிகரி வழங்குதல்

தலைமைச் செயலகத்தில் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அலுவலகத்திற்கு ரூபாய் 1.70 இலட்சம் செலவில் ஒரு டிஜிட்டல் நகலெடுக்கும் இயந்திரமும் (தானியங்கி முதன்மை அச்சுப்பொறி) ஒரு நிகரியும் வழங்கப்படும்.